



பணிபுரிவர். அனைவரும் அமர்ந்து ஒன்றாக உரக்கச் சரணம் ஒலிப்பர்; அமர்ந்து ஒன்றாக விருந்து அருந்துவர். சமையலில் தீமுட்டிப் பெற்ற சாம்பலைப் பிரசாத விபூதியாக வீடு கொண்டு செல்வர்.

அன்னதானத்தின் அழகும் ஆழமும் முழுமையாக விகசிக்கும் பம்பா சத்ய ஓர் உன்னதமான ஆன்மீகச் செயல்பாடு.

## பம்பை-பிதுர்க்கடன்

பம்பை நதிக்கரையில் செய்யப்படும் சமயச் சடங்குகளில் ஒன்று பிதுர்க்கடன். உதயணனுடன் நிகழ்த்திய போரில் இறந்தவர்க்காக ஐயப்பன் நீர்க்கடன் செய்த இடம் பம்பை. எனவே ஐயப்ப பக்தர்கள் இங்கு பித்ருதர்ப்பணம் செய்வதைப் புண்ணியமாகக் கருதுகின்றனர். தர்ப்பண பலன் காசிக்கு நிகரானது.

## பம்பா ஜோதி

பம்பா நதிக்கரை ஐயப்பன்மார்க்குப் புனித இடம். அங்கு நிகழும் நீராடல், பூஜை, பஜனை, தர்ப்பணம், நல்விருந்து, ஒளித்தேர்கள் என்பவை பக்தர்களை மனம் நெகிழச் செய்யும். உற்சாகமும், ஆனந்தமும் மேலிட பக்தர்கள் பம்பா விளக்கு அல்லது பம்பா ஜோதி எனும் ஒளித்தேர் மிதக்க விடுவர்.

பம்பா ஜோதி என்பது குச்சிகளால் கட்டியமைத்த தெப்பத்தில் அகல் விளக்குகளோ அல்லது மெழுகுவர்த்திகளோ ஏற்றிப் பம்பை நதி நீரோட்டத்தில் மிதக்கவிடும் புண்ணியச் செயலாகும். வாழை மரத் தோறுகளையும், கமுகம் பாளைகளையும் பயன்படுத்திப் பம்பை நதியில் விளக்குத் தேர்களை மிதக்க விடுவதும் உண்டு. நதிதீரத்தில் சரண கோஷம், பட்டாசு முழக்கம், ஐயப்ப கீதங்கள், நாத சுர ஓசை என எல்லாம் ஐயன் புகழ்பாடும்.

## பயண கோஷங்கள்

சபரிமலை யாத்திரையின் பயண கோஷங்கள் பல்வகையின. வழிநடை வருத்தம் தெரியாதிருக்க ஐயப்பன்மார் முழக்கும் பயண கோஷங்கள் இனிமையானவை; அர்த்தம் மிக்கவை; பக்தி உணர்வு ததும்புபவை.

''பகவான் சரணம்! பகவதி சரணம்''; ''தேவன் சரணம், தேவி சரணம்'' ''சுவாமியப்பா ஐயப்பா! சரணமப்பா ஐயப்பா!'' எனும் சரண கோஷங்கள் சரணாகத நறுமணமுடையவை.

''ஏற்றி விடய்யா! தூக்கி விடய்யா!''; ''தேகபலம் தா! பாத பலம் தா!'' எனும் பயண கேஷங்கள் வழிநடை வருத்தம் போக்குபவை.

''காப்பாயப்பா ஐயப்பா!''; ''எங்களப்பா ஐயப்பா!''

''ஏழையப்பா ஐயப்பா!''; ''ஏழையப்பா ஐயப்பா'' - எனும் குரலில் நேயம் மிக்க நெருக்கம் ஒளிரும்.

''வில்லாளி வீரனே! வீரமணி கண்டனே!'' எனும் சரண விளிகளில் உற்சாகமும் உரிமையும் ததும்பி நிற்கும்.

### சமஸ்கிருதத்தில் நைவேத்தியப் பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| வெல்லம் | குளோபகாரம் | வாழைப்பழம் | கதளிபலம் |
| கற்கண்டு | ரஸகண்டம் | பசும்பால் | கோக்ஷீரம் |
| நெய் | ஆஜ்யோபகாரம் | வடை | மாஷாபூபம் |
| அப்பம் | அபூபம் | வெண்ணை | நவநீதம் |
| அவல் | ப்ருதுகம் | அன்னம் | சால்யன்னம் |
| எள்சாதம் | திலான்னம் | கரும்பு | இக்ஷுகண்டம் |
| மாம்பழம் | சூதபலம் | திராட்சை | த்ராக்ஷாபலம் |

''நெய்யபிஷேகம் சுவாமிக்கே! பள்ளிக்கட்டு சுவாமிக்கே!''

''அவலும் பொரியும் சுவாமிக்கே! கதலிப்பழமும் காணிப் பொன்னும் சுவாமிக்கே'' எனும் கோஷங்களில் பக்தியுணர்வின் நிவேதனம் திகழும்.

## பரசுராமர்

கேரள நாட்டை ஸ்தாபித்தவர் பரசுராமர். கேரளத்தின் நல்வாழ்வும், பெருவளமும் கருதிப் பல சக்திமிக்க தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்தார். சபரிமலையில் ஐயப்ப விக்ரகத்தை பிரதிஷ்டை செய்தவர் இவரே என்று நம்பப்படுகிறது.

## பஸ்மக்குளம்

ஒரு புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படும் பஸ்மக் குளத்தில் சந்நிதானம் வந்து சேரும் ஐயப்பன்மார்கள் குளித்துப் பரிசுத்தம் அடைதல் பண்டை நாள் முதலே வழக்கமாக உள்ள நிகழ்ச்சி. சயனப் பிரதட்சணம் செய்யும் பக்தர்கள் இக்குளத்தில் நீராடிய பின்னரே தம் நேர்ச்சையை நிறைவேற்றுகின்றனர். இப்போது இக்குளம் அமைந்துள்ள இடத்தில் தான் பக்தையான சபரியின் சாம்பல் புதைக்கப்பட்டதாக ஐதீகம். எனவே இங்கு மூழ்கி எழுவது புனிதமானதாகக் கருதப்படுகிறது.

## பிரசாதம்

மகரசங்கிரம தினத்தில் ஸ்ரீ ஐயப்பனுக்கு நெய்யபிஷேகம் முக்கியம். அபிஷேகம் செய்த நெய்யும், நெய்த்தேங்காயின் ஒரு முடியும் பிரசாதமாகப் பெற்றுக் கொள்வர் பக்தர். அரவணைப் பாயாஸமும், அப்பமும் பேரளவில் பிரசாதமாகப் பெறப்படும்.

## பிரதிஷ்டை

ஐயப்பன் எய்த அம்பு விழுந்த இடத்தில் ஆலயம் அமைக்கப்பட்டது. அதில் தர்ம சாஸ்தாவின் விக்ரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பட்டபந்தம் பூண்டு, சின் முத்திரையுடன் அமைந்த, கால் முட்டில் இடதுகரம் தொங்கவிட்ட திருக்கோலமே திருவுருவத் தோற்றமாகும். மகர சங்கிரம நன் முகூர்த்தத்தில், சனிக்கிழமையன்று பரசுராமரே இப்பிரதிஷ்டையினைச் செய்தருளினார் என்பது ஐதீகம்.

## பிரமன்

திருமாலும் சிவபிரானும் ஹரிஹர சுதனைப் பிரமனிடம் தந்தனர். அவர் அவனுக்குச் சகல கலைகளையும் அருளி, தர்ம சாஸ்தா எனும் பெயரும் தந்தார். மகிஷிக்கு மூன்று வரங்கள் அருளியவரும் பிரமனே. ஒன்று: பதினான்கு உலகங்களும் அவள் வசமாகும்; இரண்டு: அவள் முடியிலிருந்து அவளைப் போன்ற அரக்கியர் தோன்றுவர்; மூன்று: ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்து பன்னிரு ஆண்டுகள் பிரம்மச்சரியம் பேணிய மனிதனால் மட்டுமே மரணம் சம்பவிக்கும்.

பிரமன் என்பது படைப்பாற்றல். பிரமனின் நான்கு முகங்களும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கின் குறியீடுகள். தர்ம சாஸ்தாவின் தர்ம சக்திக்கும், மகிஷியின் அதர்ம சக்திக்கும் பிரமனே காரணமாகும் பௌராணிகப் பார்வை ஆழமான அர்த்தமுடையது.

## புலிப்பால்

அரசியின் தீராத தலைவலி புலிப்பாலால்தான் நிவர்த்தி